**கிராம நிர்வாகம் - கிராம நிர்வாக அலுவலர்கள் - மாநில / மாவட்ட / கோட்ட – வட்ட அளவில் பொது இடமாறுதல் - நெறிமுறைகள் பின் பற்றுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**வருவாய் (பணி) – 7(1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்** 515 **நாள் 25.08.2008**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.884 வருவாய்த்துறை நாள் 10.08.1992
2. அரசாணை (நிலை) எண்.1156 வருவாய்த்துறை நாள் 08.12.2005
3. அரசு கடிதம் (நிலை) எண் 274 வருவாய்த்துறை நாள் 04.09.2001
4. அரசாணை (நிலை) எண்.403 வருவாய்த்துறை நாள் 25.08.2004
5. அரசாணை (நிலை) எண்.534 வருவாய்த்துறை நாள் 14.08.2006
6. அரசு கடித எண் (நிலை) எண் 39601/பணி-7(i)/06-2, வருவாய் நாள் 16.11.2006
7. அரசு கடித எண் (நிலை) எண் 10383/எஸ்/2008-1, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 04.04.2008

**மீண்டும் படிக்கவும்:**

8. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண் (நிலை) எண்.பணி-5(1)/86086/07, நாள் 27.06.2008

-------

**ஆணை**:

அரசின் நிருவாகச் செலவினங்களைக் குறைக்கும் நோக்கில் 1999 ஆம் ஆண்டு முதல் 2007 - ஆம் ஆண்டு வரை அரசு அலுவலர்களின் பொது மாறுதல்களுக்கு இருந்து வரும் தடையாணையினை, 2008-2009-ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்க முடிவெடுத்து மேலே ஏழாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிட்டுள்ளது.

(I) நிருவாகத் தேவையில்லாத பட்சத்தில், மூன்றாண்டுகள் பணி முடித்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் மட்டும் செய்யப்படும் பொது மாறுதல்களுக்கு 1999- ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலிருந்து வரும் தடையினை 2008 ஆண்டிற்கும் நீட்டிக்கலாம்.

(II) நிருவாகத் தேவையின் பொருட்டு மாறுதல்கள் இன்றியமையாதெனில் அம்மாறுதல்களை மட்டும் அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறையைக் கலந்தாலோசித்து, சுற்றோட்டத்தில் ஆணை பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அனுமதிக்கலாம்

(iii) காலியாக உள்ள இடத்திற்கு விருப்ப மாற்றம் கோரும் விண்ணப்பம் ஒருவருக்கு ஒருவரான இசைவு மாற்றம் கோரும் விண்ணப்பம் மற்றும் கணவன் / மனைவி பணிபுரியும் இடத்திற்கு மாற்றல் கோருபவர்களின் விண்ணப்பம் ஆகியவற்றை மட்டும், பயணப்படி மற்றும் தினப்படி முதலியன கோராத பட்சத்தில், ஆய்வு செய்து மாறுதல் வழங்கலாம்.

2. கடந்த ஆண்டுகளில் பொது மாறுதல்கள் நடைமுறைப்படுத்தியபோது ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில், கிராம நிர்வாக அலுவர்களுக்கு என சிறப்பினமாக வெளியிடப்பட்ட அரசாணைகளில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளைத் தொகுத்து ஒருங்கிணைக்கும் வகையிலும், அவ்வப்போது ஒவ்வொரு ஆண்டும் நெறிமுறைகளை வகுப்பதைத் தவிர்க்கும் வகையிலும், ஒருங்கிணைந்த நெறிமுறைகள் அடங்கிய புதிய ஆணைகள் வெளியிடப்பட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறு புதிதாக ஒட்டுமொத்த அரசாணை பிறப்பித்தால் அடுத்து வரும் ஆண்டுகளில் பொது மாறுதல் உத்திரவு வழங்கும் பொழுது, கடந்த கால்களில் ஏற்பட்ட நடைமுறை சிக்கல்களினால் எழுந்த தேவையற்ற வழக்குகள் தொடர வாய்ப்பு இருக்காது. மேலும் மாறுதல் ஆணைகளுக்கு எதிராக வழக்கு ஏதேனும் தொடரப்பட்டால், மாறுதல் ஆணைகளை நீதிமன்றத்தில் வலியுறுத்தி, அரசு தரப்பில் வெற்றி பெறவும், வழக்குகளை தள்ளுபடி செய்யவும் புதிய அரசாணை சட்டப்படி செல்லத்தக்கதாக அமையும் எனக் கருதப் படுகிறது. எனவே கிராம நிர்வாக அலுவலர்களது பொது மாறுதல்கள் தொடர்பாக தற்போது நடை முறையில் உள்ள அரசாணைகளை ரத்து செய்துவிட்டு, புதிதாக ஆணை பிறப்பிப்பது குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரிடம் அறிக்கை கோரிப் பெறப்பட்டது. மேலே 8 ல் படிக்கப்பட்ட சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் அறிக்கையை நன்கு ஆய்வு செய்து, வரும் காலங்களில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மாநில / மாவட்ட / கோட்ட / வட்ட அளவில் பொது இடமாறுதல் அளிக்கும்போது, கீழ்கண்ட நெறிமுறைகள் அறிவுரைகளை கடைபிடிக்க வேண்டும் என அரசு முடிவு செய்து, அவ்வாறை ஆணையிடுகிறது.

(A) பணியிட மாறுதல் என்பது ஒரு அரசு அலுவலரது பணிக்காலத்தில் தவிர்க்க முடியாத நிகழ்வு என நீதிமன்றங்களால், (அ.ம.எண் 6046/01ல் தீர்ப்புரை நாள் 27.9.200 டபிள்யு.ப்பி. எண் 18367/01 ல் 1 சென்னை உடர்நீதிமன்ற தீர்ப்புரை நாள் 09.10.2001 மற்றும் அ.ம.எண்.6164 மற்றும் 6105/01 ல் தீர்ப்புரை நாள் 3.10.01) அங்கீகரிக்கப்பட்ட கோட்பாட்டின் அடிப்படையில், கிராம நிர்வாக அலுவலர்களது மாறுதல்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திற்கும் செயல்படுத்தப்படும்.

(B) அரசின் பொதுமாறுதல் ஆணை கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பொருந்தாமை.

கிராம நிர்வாக' அலுவலர்காளின் பணி விதிகளின்படி, அவர்கள் பொறுப்பு கிராமங்களிலேயே தங்கி பணிபுரிதல் வேண்டும். மேலும் கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்த வரையில், அவர்களது பணியின் தன்மை மற்றும் பணிபுரியும் காலம் ஆகியன கிராமங்களின் வகைப்பாட்டை பொறுத்து முற்றிலும் மாறுபட்டதாகும். எனவே ஏனைய அரசு அலுவலர்களைப் போன்று, வேறு ஊர்களுக்கோ மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ மாறுதல் செய்யப்படுவது இல்லை. பெரும்பாலும் ஒரு வட்டத்திற்குள், ஏற்கெனவே பணிபுரியும் கிராமத்திற்கு அருகாமையிலேயே பணிமாற்றம் செய்யப்படுகின்றனர். தவிர்க்க இயலாத ஒரு சில நேர்வுகளில் மட்டுமே, வட்டம் விட்டு வட்டத்திற்கு கோட்ட அளவில், மாறுதல் செய்யப்படுகின்றனர். சொந்த வட்டம் மற்றும் கோட்டத்திற்குள்ளேயே மாறுதல் செய்யப்படுவதால், அவர்களது குழந்தையின் கல்வி வசதியை கருத்தில் கொண்டு, பெரும்பாலோனோர் அவர்கள் பணி புரியும் கிராமப்பகுதியை ஒட்டியுள்ள நகர்ப்புறங்களில் நிரந்தரமாக குடியிருப்பு வைத்து

வசித்து வருவதால், கல்வியாண்டு துவங்கியயின் மாறுதல் செய்வதால் எவ்வித பாதிப்பிற்கும் உட்படும் வாய்ப்பு இல்லை. கிராம நிர்வாக அலுவலர்களின் பணிகளும், கடமைகளும் ஏனைய அரசு ஊழியர் களுடைய பணிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட களப்பணி என்பதால், ஏப்ரல் / ஜுன் மாதங்களில் ஏனைய அரசு ஊழியர்களுக்கு பொது மாறுதல் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்ட அரசு ஆணை (நிலை) எண்.10 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 07.01.1994 என்பது கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்த மட்டில் அவர்களது மாறுதல்களுக்கு முற்றிலும் பொருந்தாது. இதனால் பொதுவாள அரசு ஆணையின் அடிப்படையில், வேண்டுமென்றே வழக்குகள் தொடுத்து தடையாணை பெறுவதை தவிர்க்க நல்ல வழி பிறக்கும்.

(C) நிர்வாக அலுவலர்களின் பொது மாறுதல் காலம் 'மே' மாதம் என்பதை ரத்து செய்தல்.

கிராம நிர்வாக அலுவலர்களுக்காக வெளியிடப்பட்ட அரச ஆணை (நிலை) எண்.864, வருவாய்த் துறை, நாள் 10.8.92 கூறப்பட்டுள்காட்டி, கிராம நிர்வாக அலுவலர் மாறுதல் காலம் "மே மாதம்" என்ற ஆணை ரத்து செய்யப்படவேண்டும். ஏனெனில், கிராம நிர்வாக அலுவலர்களது மாறுதல் எந்நேரத்திலும், முன் பத்தியில் கூறியபடி செயல்படுத்தப்படலாம். எனினும், கிராம நிர்வாக அலுவலர்களது பொது மாறுதல் குறித்து, அவர்களது தகுதியை நிர்ணயம் செய்யும் நாளாக "ஜீலை முதல் தேதி" கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அரசு ஊழியர்களின் பொது மாறுதல்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பிறப்பிக்கப்படும் அரசின் தடையாணை தேர்தல் தொடர்பான பணிகள், அப்போதைய அவசியம் மற்றும் அவசரப் பணிகள் மற்றும் அந்த ஆண்டில் நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்பவும், கடந்த ஆண்டில் மாறுதல்கள் மேற்கொள்ளப் பட்ட காலத்தை கணக்கில் கொண்டும், ஒவ்வொரு ஆண்டும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு தனி ஆணைகள் பிறப்பிக்கப்படும். அவ்வாறு **வருடத்தில் எந்த மாதத்திலும் பொது மாறுதல் ஆணை பிறப்பிக்கும் பொழுது, அந்தந்த ஆணைகளில் நிர்ணயிக்கும் நாளன்று 'அ' கிராமத்தில் ஓராண்டு மற்றும் ஆ கிராத்தில் மூன்றாண்டுகள் பணி முடித்த நிர்வாக அலுவலர்களைத் தொடர்ந்து அதே கிராமத்தில் பணிபுரிய அனுமதிக்கலாகாது.**

(D). கிராம நிர்வாக அலுவலர்களின் முதுநிலை:-

கிராம நிர்வாக அலுவலர்கள் நிர்வாகக் காரணங்களால், வேறு மாவட்டங்களுக்கு கோட்டங் களுக்கு அல்லது வட்டங்களுக்கு மாற்றப்பட்டு இருந்தால் தவிர, இயன்றவரையில் அவர்களின் சொந்த வட்டங்களிலேயே பணிபுரிய அனுமதிக்கப்பட வேண்டும். சொந்த வட்டம் என்பது சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் பணியில் சேரும் பொழுது அடிப்படை விதிகளின் கீழ் அவரது பணிப்பதிவேட்டில் அவர் தந்த விவரங்களின் அடிப்படையில் பதியப்பட்டுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இதில் எவ்விதமான மாறுதலும் பிற்காலத்தில் செய்தல் கூடாது.

(E). கிராம நிர்வாக அலுவலர்களது முதுநிலை நிர்ணயம் செய்வதற்கு 'மாவட்ட முதுநிலை அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டும். அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட "கோட்ட முதுநிலை மற்றும் "வட்ட முதுநிலை" நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(F). கிராம நிர்வாக அலுவலர்களின் பெது மாறுதல் நடைமுறைப்படுத்துதல்-

தற்போது நடைமுறையில் உள்ளபடி பொதுவாக 'அ' பிரிவு கிராமங்களில் பணிபுரியும் காலம் ஓராண்டும், 'ஆ' பிரிவு கிராமங்களில் பணிபுரியும் காலம் மூன்று ஆண்டுகளும் என வரையறை செய்யப்பட வேண்டும்.

(G). அ' பிரிவு கிராமங்களுக்கு மாறுதல் பெற தகுதியற்றவர்கள்

i) கடும் பணிக்குறைபாடுகளின் காரணமாக தண்டனை பெற்றவர்கள் மற்றும் இவ்வகையில் ஏற்கனவே தற்காலிகப் பணிநீக்கம் செய்யபட்டு, பின்னர் ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீளவும் பணியமர்த்தப்பட்டவர்கள்.

ii) தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17(ஆ)வின் படி கடும் குற்றச்சாட்டுக்கள் நிலுவையில் உள்ளவர்கள்.

iii) அரசுப் பணத்தை கையாடல் செய்து, ஒழுங்கு நடவடிக்கைக்குப்பின் தண்டனை பெற்றவர்கள், தவறான கணக்கு எழுதுதல், அரசு புறம்போக்கு நிலங்களை பாதுகாக்கத் தவறுதல், போலி பட்டாக்கள் வழங்கக் காரணமாக இருத்தல், அரசு நிலத்தை அபகரிக்கத் துணையாக இருத்தல், போன்ற கடும் குற்றங்களைப் புரிந்து, ஒழுங்கு நடவடிக்கையை சந்தித்து வருபவர்கள் அல்லது இவை போன்ற செயல்களின் காரணமாக தண்டனை பெற்றவர்கள் அல்லது மாறுதலின் போது ஏற்கனவே வழங்கப்பட்ட தாண்டணை அமுலில் இருக்கப் பெற்றவர்கள்.

iv) நிருவாகக் காரணங்களால் (லஞ்ச ஒழிப்புத்துறையின் அறிக்கையின் பேரில்) ஒரு கோட்டம் அல்லது வட்டத்திற்கு அப்பால் மாறுதல் செய்யப்பட்டவர்கள்.

v) கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்புத்துறையினரால் கையூட்டு வழக்கில் கைது செய்யப்பட்டு, தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு, பின் நீதிமன்ற தடை உத்தரவு பெற்று, மீண்டும் அதே இடத்தில் அல்லது வேறு இடத்தில் பணியில் உள்ளவர்கள் மற்றும் இத்தகைய வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இருப்பவர்கள்.

vi) துறை ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு அடிக்கடி உட்படுத்தப்பட்டு, தண்டனை பெற்றவர்கள்.

vii) ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் மற்றும் எந்த வகையான குற்றவியல் வழக்கிலும் குற்றம் சாட்டப்பட்டவராக உள்ளவர்கள்.

viii) புகார்கள் அடிப்படையில் கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையினரால் விரிவான விசாரணைக்குட்பட்டவர்கள் மற்றும் தண்டனை பெற்றவர்கள்.

(H). ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு கிராம அட்டவணை தயாரித்தல். --

கிராம நிருவாக அலுவலர்களை 'அ' மற்றும் 'ஆ' பிரிவு கிராமங்களுக்கு மாற்றம் செய்யும் பொழுது, வட்ட அளவில் மூன்று பட்டியல்கள் தயாரித்தல் பேண்டும் (i) முதல் பட்டியலானது வட்ட அளவில் உள்ள 'அ' பிரிவு கிராமங்களை அவற்றின் வரிசை எண்ணின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும் (ii) இரண்டாவது பட்டியலானது, வட்ட அளவில் 'ஆ' பிரிவு கிராமங்களை அவற்றின் வரிசை எண்ணின்

அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். (iii) மூன்றாவது பட்டியலானது, அவ்வட்டத்தில் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு கிராமங்களில் பணிபுரியும் அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களை ஒருங்கிணைத்து, அவர்களின் முதுநிலை மற்றும் தகுதி அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும்.

(I) தகுதி என்பதற்கும், ஒரே தகுதியில் சிலர் இருந்தால் அவர்களை பட்டியலில் கொண்டு வருவது குறித்தும் தெளிவுரை...

ஒரு வட்டத்தில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, அவர்களின் பணிமுதுநிலை பட்டியல் (மாவட்ட அளவிலான முதுநிலையின்படி) தயார் செய்கையில், அவர்களது பெயருக்கெதிரே பின்வரும் விவரங்களை குறிப்பிட்டு, பட்டியல் தயார் செய்தல் வேண்டும்:

(i) அவர் தற்போது பணி புரியும் கிராமம் - ('அ' அல்லது 'ஆ' கிராமம்) எந்த தேதியிலிருந்து பணிபுரிகிறார் என்ற விவரம்.

(ii) அவர் பொது மாறுதலுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர் எனில், எந்த வகை கிராமத்திற்கு மாற்றப்பட வேண்டியவர்.

(iii) மாற்றம் செய்யப்பட வேண்டாதவராயின் அதன் விவரம்.

(iv) 'அ' பிரிவு கிராமத்திற்கு மாறுதல் பெற தகுதியற்றவர் எனில், அதன் விவரம் (கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையினரால் கைது செய்யப்பட்டு பின் நீதி மன்ற தடை உத்தரவின் பேரில் மீண்டும் பணியில் உள்ளவர் உள்ளிட்ட பிற காரணங்கள்).

(v) 'அ' பிரிவு கிராமத்திற்கு மாறுதல் பெற வேண்டியவர் எனில், அவர் ஏற்கனவே எத்தனை வருடங்கள் சுழற்சியில்) 'அ' பிரிவு கிராமத்தில் பணி புரிந்துள்ளார் என்ற விவரம்.

பொது மாறுதலுக்கு உட்படுத்தப்பட வேண்டிய தகுதியுடையவர் என்ற நிலையில், மேற்குறித்த தகுதிகளின் அடிப்படையில், அவரது பெயர் இடம் பெற்ற பிறகு, பட்டியல் வரிசைக்கிரமப்படி முன்னுரிமை யளித்து வரிசையாக அழைத்து அவர்கள் விரும்பும் கிராமங்களுக்கு மாறுதல் வழங்கலாம்.

(J) கிராம நிர்வாக அலுவலர்களுக்கு கலந்தாய்வு முறையில் பொது மாறுதல், நடைமுறைப்படுத்தும் முறை.

மேலே பத்தி 2(H) ல் தெரிவித்துள்ளவாறு மூன்று பட்டியல்கள் தயாரித்த பின்னர், 'அ' மற்றும் 'ஆ' பிரிவு கிராமம் ஆகியவற்றிற்கு மாறுதல் பெற தகுதியுடையவர்களை, முதுநிலைப்படி, வரிசையாக அழைத்து, அவர்கள் விரும்பும் கிராமங்களுக்கு மாறுதல் வழங்கலாம். அவ்வாறு மாற்றம் செய்யும் போது, முதுநிலையின் அடிப்படையில் தற்போது 'ஆ' பிரிவு கிராமங்களில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்களில் மூன்று ஆண்டுகள் பணி முடிக்காதவர்களை 'அ' பிரிவு கிராமங்களுக்கு மாற்ற நேரிடலாம்.

உதாரணமாக முந்தைய ஆண்டு பொது மாறுதலில் 'அ' கிராமத்திற்கு மாறுதல் செய்யப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள், அடுத்த ஆண்டு பொது மாறுதலின் போது 'அ' கிராமத்தில் ஓராண்டு பணியை முடித்து, பொது மாறுதலுக்குப்படுத்தப்பட வேண்டியவராக இருப்பார். அவரை கட்டாட்டமாக 'ஆ' கிராமத்திற்கு மாறுதல் செய்ய வேண்டும். அவ்வாறு அவரை 'ஆ' கிராமத்திற்கு மாறுதல் செய்கையில், 'ஆ' கிராமத்தில் மூன்றாண்டுகள் முடிக்காதவர்களையும் முதுநிலை அடிப்படையில் 'அ' பிரிவு கிராமங்களுக்கு மாறுதல் செய்ய நேரிடலாம்.

கலந்தாய்வு முறையின்படி பொது மாறுதல் அளிக்கையில், (1) உடல் ஊனுமுற்ற நபருக்கும் (2) விதவைக்கும் (3) இருதயம் மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கலாம்.

(K) தகுதியுள்ள அனைவருக்கும் பொருந்தும் சுழற்சி முறை

ஏற்கனவே 'அ' பிரிவு கிராமங்களில் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் மற்றும் மூன்று ஆண்டுகள் அதற்கும் மேல் எவ்வளவு ஆண்டுகள், பணி புரிந்துள்ளனரோ, அத்தகைய பணி முடித்த கிராம நிர்வாக அலுவலர்களை, முறையே ஒன்று, இரண்டு மற்றும் மூன்று என அத்தகைய சுழற்சிகளுக்கு பின்னரே மீண்டும் 'அ' பிரிவு கிராமங்களில் பணிபுரியும் வாய்ப்பு அளிக்க வேண்டும். இதன் பொருட்டு தயாரிக்கப் படும் பட்டியலில் அவர்கள் பெயரையும் பணி முதுநில வரிசைப்படி சேர்க்கலாம். உதாரணமாக, ஒரு கிராம நிர்வாக அலுவலர் 'அ' பிரிவு கிராமங்களில் இதுவரை ஐந்து ஆண்டுகள் பணி புரிந்திருந்தால், 5 சுழற்சிகளுக்குப் பின் அவர் மீண்டும் "அ” பிரிவு கிராமங்களில் பணிபுரிய தகுதி பெறுவார். ஒரு சுழற்சி என்பது அவ்வட்டத்தில் உள்ள அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களும் ஒரு முறை 'அ' கிராமத்தில் பணி முடிக்கும் காலமாகும்.

(L) தகுதி முதுநிலைப்படி ‘அ’ கிராம பணியிடம் வழங்கல்.

இவ்வாறு முறையான பட்டியலிடப்பட்டு, வட்ட அளவில் பணி முதுநிலை வரிசை அடிப்படையில், 'அ' பிரிவு கிராமத்திற்கு மாறுதல் பெற தகுதியான கிராம நிர்வாக அலுவலர், மேற்படி 'அ பிரிவு கிராமத்திற்கு மாறுதல் பெற விரும்பவில்லையெனில், 'அ பிரிவு இடமாற்றத்திற்கான அவரது முறை முடிவுற்றதாகவே கருதப்படும். அடுத்த சுழற்சியில் தான் அவருக்கு மீண்டும் வேறொரு 'அ' பிரிவு கிராம மாறுதலுக்கு முதுநிலை அடிப்படையில் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்.

(M) கோட்ட அளவிலான சிறப்பு பணி மாறுதல்

கோட்ட அளவில் 'அ' பிரிவு கிராமங்கள், 'ஆ' பிரிவு கிராமங்களுக்கு சமமாகவோ, அதிகமாகவோ உள்ள காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செங்கல்பட்டு கோட்டம், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருவள்ளூர் மற்றும் பொன்னேரி கோட்டம், கோவை மாவட்டத்திலுள்ள கோவை கோட்டம், மற்றும் இது போன்ற நிலை ஏற்படும் பிற கோட்டங்களிலும், வட்ட முதுநிலை என்பதற்கு பதில் அந்தந்த கோட்ட அளவில் தயாரிக்கப்

பட்ட முதுநிலைப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு, கோட்ட அளவில் மாறுதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(N) கோட்ட அளவிலான சிறப்புப்பணி மற்ற நடைமுறை

கோட்ட அளவில் மாறுதல் செய்கையில், 'அ' பிரிவு கிராமத்தில் ஓராண்டுக்கும் மேலாகப் பணிபுரிந்த காரணத்தால் மாறுதல் செய்யப்பட வேண்டிய கிராம நிர்வாக அலுவலர் ஒருவருக்கு அவர் பணிபுரிந்த வட்டமே சொந்த வட்டமாக இருப்பின், அவரை 'ஆ' பிரிவு கிராமத்திற்கு மாறுதல் செய்கையில், அதே சொந்த வட்டத்தில் 'ஆ' பிரிவு கிராமம் காலியாக இருந்தால் மட்டுமே அவரை அதே வட்டத்தில் மாறுதல் செய்ய முன்னுரிமை வழங்கலாம். அவ்வாறு 'ஆ' பிரிவு கிராமம் காலியாக இல்லையெனில், அக்கோட்டத்தில் ஊள்ள இதர வட்டங்களில் உள்ள 'ஆ' பிரிவு கிராமங்களில் அவருக்கு விருப்பமான கிராமத்தை கலந்தாய்வு முறையில் அவர் தேர்வு செய்து கொள்ளலாம்.

(O) மாவட்ட மாறுதலில் வந்துள்ளவர்களின் நிலை

சொந்த விருப்பத்தின் அடிப்படையில் மாவட்ட மாறுதலில் வந்தவர்கள், தற்போது பணிபுரியும் மாவட்டத்தில் நிர்ணயிக்கும் முதுநிலைப்படி, நடைமுறையில் உள்ள விதிகளை அனுசரித்து மாற்றம் செய்ய வேண்டும். முந்தைய மாவட்டத்தில் ஏற்கனவே 'அ' பிரிவு கிராமங்களில் பணிபுரிந்திருந்தால், பத்தி 2(K)-ல் வழங்கப்பட்ட அறிவுரைகளை அனுசரித்து அவர்களுக்கு மாற்றம் வழங்க வேண்டும்.

(P) பொது மாறுதல் அல்லாத காலங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை.

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு என அவ்வப்பொழுது அரசு வழங்கும் அறிவுரைகளின்படி பொது மாறுதல் வழங்கப்பட்ட பின்னர், இடைக்காலத்தில் பின்வரும் காரணங்களுக்காக அவர்கள் மாறுதல் செய்யப்படலாம்:

(i) கிராம நிர்வாக அலுவலர் ஒருவர், குறிப்பிட்ட கிராமத்தில் தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்படுவது ஊறுவிளைவிக்கும் எனக் கருதப்படும் பட்சத்திலும், பொதுநலன் கருதியும், அவரை வேறு கிராமத்திற்கோ அல்லது வேறு வட்டம் / கோட்டத்தில் உள்ள கிராமத்திற்கோ அல்லது மாவட்ட மாறுதலோ செய்யலாம். அவ்வாறு மாறுதல், வழங்கும்போது, 'அ' பிரிவு கிராமத்தில் ஓராண்டு பணி மற்றும் 'ஆ' பிரிவு கிராமத்தில் மூன்றாண்டு பணி முடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.

(ii) ஒரு கிராம நிர்வாக அலுவலர் நீண்டகால விடுப்பில் செல்வதால் ஏற்படும் காலியிடம், பணி ஓய்வு, இராஜினாமா அல்லது இறப்பு, பணியறவு நிரந்தர பணிநீக்கம் போன்ற காரணங்களால் ஏற்படும் காலியிடங்களை நிரப்பும் போது, கிராம நிர்வாக அலுவலர்களை

மாறுதல் செய்யும் சூழ்நிலை என்ன என்பதை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவித்து, அவரது முன் அனுமதியுடன் தான் இந்த மாறுதல் ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண் டும்.

(iii) அவ்வாறு காலி ஏற்படும் 'அ' மற்றும் 'ஆ' வகைபாடு கிராமங்களுக்கு மாறுதல் மூலம் பணி இடம் நிரப்பும் போது, ஏற்கெனவே வரையறுக்கப்பட்டுள்ளா பத்தி -2(H)- ல் கூறியுள்ள பட்டியலின்படி ஏற்கலாம். 'அ' பிரிவு கிராமங்களுக்கு பொது மாறுதலின் போது மாறுதல் செய்யப்பட்டவர்கள் தவிர எஞ்சியுள்ள கிராம நிர்வாக அலுவலர்களில் முதுநிலையின்படி முதலில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்குத்தான் கிராமத்திற்கு மாறுதல் வழங்கப்பட வேண்டும்.

(iv) அதே போல், போலே சொல்பேட்டட்டுங்க நாணங்களுக்காக, பொறுக்கு மேற்பட்ட 'அ' கிராமங்களில் காலியிடம் நிரப்பப்பட வேண்டியிருப்பின், பத்தி 2(H)-ல் கூறப்பட்ட முதல் பட்டியலின்படி தாரிக்கப்பட்ட முதுநிலை மற்றம் சுழற்சியின்படி மாறுதல் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு பணி முதுநிலை மற்றும் சுழற்சியின் அடிப்படையில் மாறுதல் வழங்கும் போது, 'ஆ பிரிவில் 3 ஆண்டு பணி முடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.

**(v) ‘அ' பிரிவில் பணிபுரியும் ஒரு கிராம நிர்வாக அலுவலர் மற்றொரு 'அ' பிரிவு கிராமத்திற்கு கூடுதல் பொறுப்பு வகிக்கக் கூடாது.**

(vi) ஒவ்வொரு ஆண்டும், சனவரி முதல் டிசம்பர் வரை ஒவ்வொரு முறையும் பிறப்பிக்கப்படும் மாறுதல் உத்திரவுகளுக்கு ஒரு பொதுக் கோப்பு கோட்ட அலுவலகத்திலும், வட்ட அலுவலகத்திலும் பராமரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாறுதல் உத்தரவிற்கும் வரிசை எண்ணை கீழ்க்கண்ட உதாரணத்தில் சுட்டிக்காட்டியபடி வழங்க வேண்டும். இது ஒரு வருடத்தில் எத்தனை மாறுதல்கள் வருவாய் கோட்டத்தில் பிறப்பிக்கப்படுகின்றன என்பதையும், அவை எப்போது பிறப்பிக்கப்பட்டன என்ற தகவலையும் சேகரிக்க உதவியாக இருக்கும்.

1. செயல் முறை ஆணை எண். 1000/5.1 முதல் செயல்முறை ஆணை)
2. செயல்முறை ஆணை எண் 1000/5.2 (2 வது செயல்முறை ஆணை)
3. செயல்முறை ஆணை எண் 1000/5.3 (3 வது செயல்முறை ஆணை)

(vii) ஆண்டு இறுதியில் இக்கோப்புகளை பணி மாறுதல் ஆணைகளுக்கு எதிராக வழக்குகள் ஏதும் நிலுவை இல்லையெனில் மட்டும் நிரந்தர முடிவாக (நி.மு) முடித்து, முறைப்படி

பதிவறைக்கு அனுப்ப வேண்டும். வருவாய் கோட்டாட்சியர்களும் மற்றும் வட்டாட்சியர் களும் அவர் தம் அலுவலக சம்பந்தப்பட்ட உதவியாளர்களும் அதற்கு பொறுப்பு ஆவார்கள். பொது மாறுதலை எதிர்த்து தொடுக்கப்படும் ரிட் போன்ற வழக்குகள் ஏதேனும் இருப்பின், ஒவ்வொரு ரிட் மானுவிற்கும் தனித்தனியாக தனிக்கோப்பை துவக்கி ரிட் வழக்குகளை கவனமாகவும், உடனடியாகவும் கையாள வேண்டும்.

(Q) ஒவ்வொரு முறையும் மாறுதல் முடிந்த பின்னர், கிராம நிர்வாக அலுவலர்கள் மாறுதல் குறித்த விவரங்களை கிராம நிர்வாக அலுவலர்களது பணிப்பதிவேட்டில் கண்டிப்பாக விடுதல் ஏதுமின்றி, 'அ' கிராமம் 'ஆ' கிராமம் போன்ற விவரங்களை பதிவு செய்திட வேண்டும். இப்பணி முடிக்கப்பட்டமைக்கு வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் சான்றளிக்க வேண்டும். இந்த சான்றிதழுடன் கோட்டாட்சிர் மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

(R) கோட்டாட்சியர்கள் ஒவ்வொரு காலாண்டுக்கும் அந்த காலாண்டில் செய்யப்பட்ட மாறுதல்கள் தொடர்பான காலமுறை அறிக்கையினை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

(S) கிராம நிர்வாக அலுவலர்களின் மாறுதல் உத்தரவில், அவர்கள் நிர்வாக காரணங்களுக்காக மாற்றப்படுகிறார்கள் எனில் எந்த குறிப்பிட்ட காரணத்திற்காக என்பதை தெளிவுபடுத்துவதற்காகவும், மாறுதல் நிலையானது என்பதை ஊர்ஜிதப்படுத்துவதற்காகவும் கிராம நிருவாக அலுவலர்களின் மாறுதல்கள் செய்யும் போது கீழ்க்கண்ட படிவத்தைப் பயன் படுத்தவேண்டும்.

| வ.எண் | கிராம நிர்வாக அலுவலரின் பெயர் | தற்போது பணியாற்றும் | | | மாறுதலாகிச் செல்லும் கிராமத்தின் பெயர் | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | கிராமத்தின் பெயர் | கிராமம் அடங்கும் பிரிவின் பெயர் 'அ' அல்லது 'ஆ' | தற்போதயை கிராமத்தில் பணியேற்ற நாள் | பெயர் | பிரிவு வகை 'அ' அல்லது 'ஆ' | எந்தக் காரணங்களின் நிமித்தம் மாறுதல் எனக் குறிப்பிட வேண்டும். |
| 1 | 2 | 3(அ) | 3(ஆ) | 3(இ) | 4(அ) | 4(ஆ) | 5 |
| | | | | | | | |

மேற்கண்ட படிவத்தில் ஒரு பதிவேடு பராமரிக்க வேண்டும். அதில் ஒவ்வொரு கிராம நிருவாக அலுவரது மாறுதல்கள் குறித்து பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பதிவேடு அவ்வப்போது முகாம் செல்லும் அதிகாரிகளாலும் தணிக்கை அலுவலர்களாலும் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

(T) கிராம நிருவாக அலுவலர்களது மாறுதல்களை செயல்படுத்தும்போது, மேற்கண்ட அறிவுரைகள் / நெறிமுறைகள் எவ்வித முரண்பாடுகளோ / விடுதல்களோ இன்றி முழுமையாக பின்பற்றப்பட்டு, வழுவற்ற மாறுதல் ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

3. கிராம நிர்வாக அலுவலர்களின் பொது மாறுதல் தொடர்பாக, அரசுக்கு நிதிச் செலவினம் ஏற்படாவண்ணம் மேலே பத்தி 2(A) முதல் 2(T) வரையுள்ள நெறிமுறைகள் / அறிவுரைகளை தவறாது

கடைபிடிக்க வேண்டும் என சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் / மாவட்ட ஆட்சியர்கள் / சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**அம்புஜ் சர்மா,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை -5.
அனைத்து மாவட்டாட்சியர்கள்,

**நகல்**

பணியாளர் மற்றும், நிர்வாக சீர்திருத்தத் (B/S) துறை, சென்னை-9
நிதித்துறை, சென்னை -9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9
மாண்புமிகு அமைச்சர் வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை -9.
தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் சங்கம், சென்னை -5.
தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் முன்னேற்றச் சங்கம், திண்டிவனம். இ.கோ / உதிரிகள்

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

**பிரிவு அலுவலர்**